மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, சின்னூர் கிராமத்தில் ரூ. 7 இலட்சம் மதிப்பீட்டில், அங்கு உள்ள குளத்தின் வாயிலாக 143 ஏக்கர் 64 சென்ட் நிலம் பாசன வசதி பெறும். எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்தி 102.21 டன்கள்.

திருச்சி—தஞ்சை மாவட்டங்களில் பால்பண்ணை அமைக்கும் திட்டம்.

369—(*வினா எண் 17230)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பால்பண்ணை அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ), (ஆ) மற்றும் (இ)—தஞ்சை மற்றும் திருச்சி மாநகரங்களில் நாளொன்றுக்கு 16,000 லிட்டர் பாலைப் பக்குவிக்கும் திறன் கொண்ட பால் பக்குவிக்கும் ஆலைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன. திருச்சியிலுள்ள பால் பக்குவிக்கும் தொழிற்சாலையை மேலும் விரிவாக்க ரூபாய் 266.13 இலட்சம் மதிப்பீட்டுக்குத் திட்ட அறிக்கை ஒன்று, பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் அமைக்க, ஒப்புதல் வேண்டி, இந்திய பால்பண்ணை கழகத்துக்கு அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 19.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இது 1984-85-ம் ஆண்டு செயல்படவுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பால் பண்ணை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரங்களைத் தெரிவித்தார்கள். இன்னும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உள்ள பல்வேறு இடங்களில் பால் பண்ணை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்து அதை அரசு ஆய்வு செய்துள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தேவையான விவரங்களை அளித்து இருக்கிறேன். முதல் கட்டமாக அங்கு அமைக்கப்படும். பிறகு தேவைகளை அனுசரித்து, தேவையான இடங்களில் தொடங்கப்படும்.

மேட்டு சக்கனாக்குப்பத்திலிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்

378—(*வினா எண் 17011)—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி ஜோலார்பேட்டை பேரூராட்சியில் உள்ள மேட்டு சக்கனாகுப்பத்தில் இருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை உடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) வீட்டு மனைக்கான நில ஆர்ஜிதத்தை எதிர்த்து நில உரிமையாளர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் மீது, நில உரிமையாளர்களுக்குச் சாதகமாக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. உச்சநீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டவுடன் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது, உச்ச நீதி மன்றத்தில் வழக்கிருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்த ஒரு மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள எல்லா இடங்களிலும் இந்த மக்களுக்கு இடம் எடுத்துக்கொடுக்கின்ற திட்டத்தை அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்திற்கு இடையூறு செய்யும் வகையில் நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லுகிறார்கள். எனவே அரசாங்கம் தக்க வல்லுநர்களைக் கொண்ட குழுவை வைத்து செயல்படாத காரணத்தால், நீண்டகாலமாக இது போன்ற ஆயிரக்கணக்கான மனுக்கள் உச்ச நீதிமன்றத்திலே இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே இதை ஸ்பெஷல் ஸ்கீமாக எடுத்து, அரசாங்கமே நேரடியாக நல்ல